DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC.No.176/2025**
Prosecution witness **PW.5 (LW.6)**

| | | | |
|---|---|---|---|
| Name | : மகேஷ்குமார் (தலைமை காவலர்) | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(Accused A1 and A2 absent. Petition under section 355 of BNSS filed and allowed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **29.09.2025**

**29.09.2025 முதல் விசாரணை** :

நான் தற்போது குன்னூர் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

இதற்கு முன்பு கொலக்கொம்பை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது 31.01.2025 ம் தேதி 17.00 மணிக்கு நிலைய ஆஜரில் இருந்த போது அதிகரெட்டி கிராமம் 2 கிராம நிர்வாக அலுவலர் அ.சா.1 சுபத்ரா நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவைபெற்று அதன் தன்மமைக்கேற்பட நிலைய குற்ற எண்.7/2025 பிரிவுகள் 292, 196(1)(a) of BNS r/w 4(1) The open place (prevention of disfigurement) Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** முதல் தகவல் அறிக்கையுடன் புகார் மனுவை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை பொறுப்பு ஆய்வாளர் திரு.சதீஷ் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** :–

சம்பவயிடத்திற்கும் கொலக்கொம்பை காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 13.00 மணியிலிருந்து புகார் மனு பெறப்பட்ட 17.00 மணி இடையே சம்பவம் குறித்து காவல் நிலையத்திற்கு போன் மூலம்

தகவல் கிடைத்ததா என்றால் இல்லை. புகார் மனுவுடன் துண்டு பிரசுரம் மற்றும் போட்டோ எவையேனும் இணைத்து கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சரிவர முன்விசாரணை செய்யாமல் பொய் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

ஒம்/– அப்துல் சலாம்
நீதித்துறை நடுவர்
குன்னூர்